**SC NO.51/2012** **Date:06.03.2025**

**கூடுதல் மாவட்ட நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் ), காஞ்சிபுரம் (பக்கம் )**

**சாட்சியாகிய திருமதி. ஸ்ரீதர் என்ற Pw10 நபரின் வாக்குமூலம் (1876ம் ஆண்டின் 10 விதியின் Tr.A.Pachaiyappan, இளநிலை உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம்**

**செய்யப்படுகிறது.**

**பெயர் - திரு. ஸ்ரீதர்**

**த/பெ, - திரு. ராமு**

**வயது - 66/2025**

**தொழில் - ஏ.பி.டி பார்சல் சர்வீஸ் முகவர்**

**முதல் விசாரணை:**

நான் தற்போது ராணிப்பேட்டை மாவட்டம் திருவலம் என்ற ஊரில் வசித்து வருகிறேன். சம்பவ காலத்தில் காஞ்சிபுரம் யதோர்த்தகாரி சன்னதி தெருவில் வசித்து வந்தேன். ஏ.பி.டி பார்சல் சர்வீஸ் நிறுவனத்தில் பணி செய்து வருகிறேன். 02.07.2011 அன்று காலை 9.00 மணியளவில் எனது ஏ.பி.டி பார்சல் சர்வீஸ் அலுவலகத்தை திறப்பதற்காக வந்தேன். அப்போது எனது நிறுவனத்திற்கு எதிரே இருந்த காலி மனையில் கூட்டமாக இருந்தது. அப்போது விஷ்ணு காஞ்சி நிலையம் போலிசார் ஒரு கொலை வழக்கில் சம்பவ இடத்தின் வரைபடத்தை வரைந்து கொண்டிருந்தார்கள். ஆய்வாளர் என்னுடைய விலாசத்தை கேட்டு அதில் என்னிடம் சாட்சியாக கையொப்பம் கேட்டார். நான் போட்டேன். என்னுடன் யார் கையொப்பம் செய்தார்கள் என்று எனக்கு நினைவு இல்லை. என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 1வது கையெழுத்து என்னுடைய தான். அது **அ.சா.ஆ.16** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 1வது கையெழுத்து என்னுடைய தான். அது **அ.சா.ஆ.17** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்க அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டு அனுமதி அளித்ததன் பேரில் சாட்சியை பிறழ் சாட்சியாக பாவித்து அரசு தரப்பில் குறுக்கு விசாரணை

கடந்த 1.7.2011 இரவு 9 மணிக்கு எனது பார்சல் சர்வீஸ் அலுவலை முடித்துவிட்டு வீட்டிற்கு போய் உறங்கி விட்டதாகவும், 2.7.2011 ஆம் தேதி காலை 8 மணிக்கு வழக்கம் போல் சர்வீஸ் கடையை திறந்து எங்கள் கடைக்கு எதிர் புறத்தில் உள்ள காலி மனையில் சின்ன காஞ்சிபுரம் வசிக்கும் கந்தவேல் என்பவரை சிலர் கத்தியால் வெட்டி போட்டுவிட்டு ஓடிப் போய் விட்டதாகவும், கந்தவேலின் உறவினர்கள் 108 ஆம்புலன்ஸ் மூலம் காஞ்சிபுரம் அரசு மருத்துவமனைக்கு அவரை கொண்டு போய் விட்டதாக கேள்விப்பட்டு தெரிந்து கொண்டும் காலை 9 மணிக்கு விஷ்ணுகாஞ்சி காவல் நிலைய காவல் ஆய்வாளர் போலீஸ் சகிதம் சம்பவ இடத்திற்கு வந்து பார்வையிட்டதாகவும் அந்த இடத்திற்கு நான் போய் பார்த்ததாகவும் எங்கள் கடைக்கு பக்கத்தில் உள்ள ஆதிநாராயணா ஏஜென்சி கணக்காளர் ஜெய்கணேஷ் என்பவரும் என்னுடன் வந்து பார்த்ததாகவும் அப்போது காவல் ஆய்வாளர் கந்தவேல் கொலை செய்த வழக்கில் சாட்சியாக வரும்படி அழைத்ததின் பேரில் நானும் என்னுடன் இருந்து ஜெய்கணேசன் என்பவரும் ஒப்புக்கொண்டு பார்வை மகஜர் சம்பவ இடமான காஞ்சிபுரத்தில் உள்ள பி.எம் சில்க்ஸ் விராலிமலையில் நடந்துள்ளது நானும் ஜெய்கணேசன் சாட்சியாக கையொப்பமிட்டதாகவும் மேலும் சம்பவம் நடந்துள்ள இடத்தில் காலை 10 மணிக்கு ரத்தக்கரை படிந்த மண் சிறிதளவும் அங்கு சாதாரண மண் சிறிதளவும் மகதலில் கைப்பற்ற மகளிர் நீங்களும் ஜெயினேஷன் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்துவிட்டு தற்பொழுது குற்றவாளிகளுக்கு பயந்து பொய் சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல

**மறுவிசாரணை இல்லை.**

**SC NO.51/2012** **Date:06.03.2025**

**கூடுதல் மாவட்ட நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் ), காஞ்சிபுரம் (பக்கம் )**

**சாட்சியாகிய திருமதி. ேஹமலதா என்ற Pw9 நபரின் வாக்குமூலம் (1876ம் ஆண்டின் 10 விதியின் Tr.A.Pachaiyappan, இளநிலை உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம்**

**செய்யப்படுகிறது.**

**பெயர் - திரு. ேஹமலதா**

**த/பெ, - திரு. ஆனந்த்**

**வயது - 42/2025**

**தொழில் - மருத்துவ ஆலோசகர்**

**முதல் விசாரணை:**

நான் தற்போது வேலூர் சி.எம்.சி மருத்துவமனையில் மருத்துவ ஆலோசகராக பணிபுரிந்து வருகிறேன். நான் சம்பவ காலத்தில் காஞ்சிபுரம் தலைமை மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியாற்றி வந்தேன். கடந்த 02.07.2011 அன்று நான் பணியில் இருந்த போது பிற்பகல் 01.30 மணியளவில் ராமகிருஷ்ணன் தலைமை காவலர் 278 விஷ்ணு காஞ்சி காவல் நிலையம் என்பவர் மேற்படி காவல் நிலையத்தின் சார்பு ஆய்வாளர் கொடுத்த வேண்டுகோள் விண்ணப்பத்தை என்னிடம் கொடுத்தார். அதில் இறந்து போன கந்தவேல், வயது 36 என்பவரது சடலத்தை உடற்கூறாய்வு செய்ய கேட்டுக்கொள்ளப்பட்டது. அதன் படி அதே நாள் பிற்பகல் 01.45 மணியளவில் நான் உடற்கூறாய்வை தொடங்கினேன். அப்போது அவரது 3 அவையங்களிலும் பிண விரைப்பு தன்மை காணப்பட்டது. அவரது வெளிப்புற உடலை கூறாய்வு செய்த போது கீழ் கண்ட வெளி காயங்கள் காணப்பட்டன.

1. 7x3x3 cm அளவில் இடது காதுக்கு மேல் ஒரு சிதைந்த காயம் காணப்பட்டது.

2. 10x5x3 cm அளவில் அவரது இடது தலையின் பின் மண்டையின் ஒரு சிதைந்த காயம் காணப்பட்டது.

3. 15x3x2 cm அளவில் இடது தலையின் மேல் பகுதியிலிருந்து பின் தலை வரை ஒரு சிதைந்த வெட்டு காயம் காணப்பட்டது.

4. சுமார் 12x5x5 cm அளவில் வலது மேல்புற தலையிலிருந்து பின் தலை வரை சிதைந்த வெட்டு காயம் காணப்பட்டது. அவரது இடது காதில் சிதைந்த வெட்டு காயம் மற்றும் அவரது காது முழுவதுமாக கிழிந்து காணப்பட்டது.

5. சுமார்7x5x3 சென்டி மீட்டர் அளவில் இடது காதில் கீழ் சிதைந்த வெட்டு காயம் காணப்பட்டது.

6. சுமார் 25x7x5 சென்டிமீட்டர் அளவிலான இடது வாய் பகுதியில் இருந்து கழுத்தில் கீழ் புறம்பறை சிதைந்த வெட்டுக்காயம் காணப்பட்டது. அதன் கீழிருந்து எலும்புகளும் தசைகளும் தெரியும் படி இருந்தது.

7. சுமார் 7x5x3 சென்டிமீட்டர் அளவில் இடதுமுன்னங்கையில் ஒரு ஆழமான வெட்டு காயம் காணப்பட்டது.

8. சுமார் 7x3x2 சென்டிமீட்டர் அளவில் இடது பெரு விரலில் ஆழமான வெட்டு காயம் காணப்பட்டது. அத்தோடு இடது பெருவிரல் கிழிந்து காணப்பட்டது.

9. சுமார் 12x5x5 சென்டிமீட்டர் அளவில் இடது கையின் மேல் பகுதியில் ஆழ்ந்த வெட்டுக்காயம் காணப்பட்டது அத்துடன் தசைகளும் எலும்புகளும் காணப்பட்டன.

10. சுமார் 5x3x2 அளவில் ஒரு வெட்டுக்காயம் காணப்பட்டது

11. 5x1 சென்டிமீட்டர் அளவில் இடது தோள்பட்டையில் ஒரு சிராய்ப்பு காயம் காணப்பட்டது.

12. இடது கையில் 1x1x2 சென்டிமீட்டர் அளவில் சிராய்ப்பு காயம் காணப்பட்டது.

13. இடது இடுப்பு பகுதியில் 3 3x3x2 சென்டிமீட்டர் அளவில் சிறந்த வெட்டு காயம் காணப்பட்டது.

14. 4x5x5 சென்டிமீட்டர் அளவில் வலது பக்க பின்புற தலையில் சிதைந்த வெட்டுக்காயம் காணப்பட்டது.

15. வலது முன் கையில் ஆழ்ந்த வெட்டுக்காயம் காணப்பட்டது.

16. 3x3 சென்டிமீட்டர் அளவில் சிராப்பு காயம் ஒன்று வலது பெருவிரலில் காணப்பட்டது அத்துடன் வலது பெருவிரல் முழுவதுமாக கிழிந்து காணப்பட்டது.

17. 12x1 சென்டிமீட்டர் அளவில் வலது வலது பக்க தோள்பட்டையில் ஒரு சிராய்ப்பு காயம் காணப்பட்டது.

18. 12x3x5 சென்டிமீட்டர் அளவில் வலது பக்க மேல்புற தலையிலிருந்து காதுவரை ஒரு சிதைந்த வெட்டுக்காயம் காணப்பட்டது.

19. முன்ப பழைய அறுவை சிகிச்சை செய்யப்பட்ட தழும்பு ஒன்று காணப்பட்டது.

20. தலையின் முடிகள் இருந்தன. இமைகள் மூடப்பட்டு இருந்தன. நாக்கு வாய்ப்பகுதியில் காணப்பட்டது. பற்கள் 32 காணப்பட்டன.

அவரது உள்ளுறுப்புகளை பரிசோதனை செய்தபோது விலா எலும்புகள் சீராக இருந்தது. இருதயம் 250 கிராம் மில்லி அளவில் இரத்தக் காரியப்பட்டது. அவரது வலது நுரையீரல் சுமார் 450 கிராம் இருந்தது. இடது நுரையீரலில் 400 கிராம் இருந்தது. சீராக கழுத்து எலும்பு சீராக இருந்தது. வயிறு நல்ல நிலையில் இருந்தது அதில் 200 மில்லி காபி நிலத்தில் திரவம் காணப்பட்டது அத்துடன் பாதி

செரித்த நிலையில் உணவு காணப்பட்டது. கல்லீரல் ஆயிரம் கிராம் அளவில் இருந்தது. வலது பக்க சிறுநீரகம் 100 கிராமம் இடது பக்க சிறுநீரகம் சுமார் 100 கிராமம் காணப்பட்டது. அவரது இடது தலையில் வெளிப்பகுதியில் ரத்தக்கட்டு சுமார் 100 கிராம் அளவில் காணப்பட்டது. அவரது மூளை சுமார் 1100 கிராம் காணப்பட்டது. அத்துடன் எனது உடல் கூறாய்வை முடித்தேன். அவரது உள்ளுறுப்புகளை ஆய்வுக்கு அனுப்பி அங்கிருந்து கிடைத்த அறிக்கையின் படி அவரது உள்ளுறுப்புகளில் எந்த விஷமும் இல்லை என்று கண்டறியப்பட்டது. தலையில் ஏற்பட்ட பலத்த அடியினாலும் இரத்தப்போக்கு மற்றும் அதிர்ச்சியினாலும் இறந்திருக்கலாம் என்று நான் கருதுறை வழங்கினேன் நான் வழங்கிய உடற்கூறாய்வு அறிக்கை அ.சா.ஆ –15 ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஆய்வாளர் விசாரித்தார்

**குறுக்கு விசாரணை**

தடைய அறிவியல் ஆய்வறிக்கை உடற்கூறு ஆய்வு செய்யும் போது என் கைவசம் இல்லை உடல் கூராவிற்கு பிறகு எனக்கு கிடைக்கப்பெற்றது. எவ்வளவு நாட்கள் கழித்து தடைய அறிவியல் ஆய்வு அறிக்கை கிடைத்தது என்றால் சரியாக நினைவில்லை ஆறு மாதங்கள் கழித்து கிடைத்திருக்கலாம். ஆய்வாளர் என்னை விசாரித்து வாக்குமூலம் பெற வில்லை.. மறுவிசாரணை இல்லை